
# பயில்நிலம்

ஒக்டோபர் 2004

மாத இதழ்



விதைப்பு 01

அறுவடை 02

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பயில்நிலம் இன்னும் பல விதைப்புகளில் அறுவடைகாண
வாழ்த்துகிறோம்

**AnushA**

*Herbal Beauty Care & Fitness Centre*



No : 24-1/1, Hampden Lane,
Colombo - 06.
Tel : 2366436.



**Branch :**
No: 1, Quarry Lane,
(off College Street)
Colombo 13.
Tel: 2434461
Hotline: 0777-483311.



# பயில்நிலம்

மாத இதழ்

**ஆசிரியர் குழு:**
பொ. கோபிநாத்
கி. திவாகரன்
ஸைரா கலீல்
க. அபிராமி
தே. அபிலாஷா

**விநியோகக்குழு :**
தே. ஜனமகன்
செ. நந்தமோகன்
அ. செஞ்ஞாயிறு


**விளம்பரக்குழு :**
கு. பார்த்தசாரதி
வி. பிரபுநாதன்
ந. பிரசாந்த்

**வெளியீடு:**
பயில்நிலம்
59/3 வைத்தியா வீதி
தெஹிவளை.
☎ 5527074

**பக்க வடிவமைப்பு :**
இ. லி. எஸ்ரோன்

**அச்சுப்பதிப்பு:**
ஆர்.எஸ்.டி. என்டர்பிரைசஸ்
சீ/3/4, அண்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 05.

## இதழில் ...




**கட்டுரை:**

அ. செஞ்ஞாயிறு
பொ. கோபிநாத்
கு. பாரதி
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ
ஆ. பகலவன்

**கவிதை:**

கவிதா
ஆஷிகா
மீநிலா
சசிகலா
அங்கவை
இ. சுபாரா
க. கார்த்திகா
கு. பாரதி

**சிறுகதை:**

கி. திவாகரன்
மகேந்திரராணி

**நேர்காணல்:**

எழுத்தாளர்
எம்.கே. முருகானந்தம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயில்நிலம்

மாற்றங்களை வேண்டி

ஒக்டோபர் 2004

விதைப்பு 01
அறுவடை 02

## புதிதாய்ப் பிறந்து

புதிய முயற்சியின் இரண்டாவது அறுவடையினூடு சந்திப்பதில் மகிழ்ச்சி. நவீனத்துவ சிந்தனைப்போக்கில் எல்லாவற்றையும் தமதாக்கல் என்பதன் அடிப்படையில் அனைத்தையும் தமக்குள்ளேயே உள்விழுங்கி விடும் பின்நவீனத்துவ சிந்தனைகள் நிறைந்து கிடக்கும் இன்றைய எமது சமூகத்தைத் திரும்பிப்பார்க்கின்ற போது அந்நிய மோகம், வெறுமைக் கலாசாரம், இலட்சியமற்ற எதிர்காலம் என எதுவுமே நம்பிக்கை தருவதாய் இல்லை.

யுத்தமற்ற அமைதித்தேசத்தில் இன்னும் தொடரும் சத்தமற்ற யுத்தங்கள், மௌனித்துப் போன நிஜங்கள் என யதார்த்தம் பேசப்படுகின்றது. சின்னத்திரைகளினாலும் வெண்திரைகளினாலும் உலகைக் கண்டு உவகை கொள்ளும் இளைய சமுதாயத்தை சிந்திக்கத் தூண்டுவதற்கான கடமையையும் கைகளில் எடுத்துக் கொண்டு பயணப்பட தொடங்கியுள்ளோம்.

முதலாவது அறுவடையை ஆர்வமாய் பெற்று இரண்டாவது அறுவடையை ஸ்பரிசிக்க துடித்துக்கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு எமது நன்றிகள். காலவரையறையற்ற கல்வித்துறையின் இளைப்பாறும் ஊட்டச்சோலையாய் பயில்நிலம் தொடர்ந்து உங்கள் விளைச்சல்களுடன் அறுவடைக்கு காத்திருக்கிறது.

ஆசிரியர் குழு





## C.I.A மண்டேலாவை 28 ஆண்டுகளுக்கு சிறைக்கனுப்பியது எப்படி?

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுதலையானபோது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் (தற்போதையவரின் தந்தையார்) தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கறுப்பின ஆப்பிரிக்கத் தலைவரிடம், அமெரிக்கர்களாகிய நாம் உங்கள் விடுதலையையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறோம் என்று சொன்னார்.

சரியாக 28 ஆண்டுகளுக்கு முன் C.I.A தென்னாபிரிக்க அதிகாரிகளுக்கு துப்புக் கொடுத்தன் மூலம் சிறைசென்ற நெல்சன் மண்டேலாவையே அமெரிக்கர்கள் சார்பில் புஷ் வாழ்த்தினார் என்றால் வியப்பாக இருக்கின்றதா? இதே புஷ் தான் C.I.A யின் தலைமையாக இருந்த காலப்பகுதியில் C.I.A யும் தேசிய பாதுகாப்பு ஏஜென்சியும் கூட்டாக இணைந்து தென்னாபிரிக்கப் புலனாய்வுத் துறைக்கு மண்டேலாவின் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் (ANC) தொடர்பாக செய்திகளை தொடர்ச்சியாக கொடுத்து வந்தது. இந்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் முற்போக்கான தேசிய இயக்கமாக இருந்து வந்தமையால் இதன் தாக்கம் ஏனைய ஆப்பிரிக்க நாடுகளில் பரவவும் செல்வாக்கு செலுத்தவும் தொடங்கியது. இதை வொசிங்டன் புகழ்பூத்த சர்வதேச கம்யூனிசத்தின் ஒரு பகுதியாகக் கருதியது.

1962 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அன்று நட்டால் (Natal) என்ற பகுதியில் வீதித் தடுப்பில் இருந்த ஆயுதமேந்திய பொலிசாரால் ஒரு கார் இடைநிறுத்தப்படுகிறது. 17 மாதகால தலைமறைவு வாழ்வின் பின் மண்டேலா கைது செய்யப்படுகிறார். இது தொடர்பான எந்தவொன்றும் ஒருவருக்குமே புரியவில்லை. ஆனால் 1986 இல் தென் ஆபிரிக்கப் பத்திரிகைகள் ஒரு செய்தியை வெளியிட்டன. அதாவது டொனால்ட் சி. ரிக்காட (Donald C. Rickad) என்ற C.I.A அதிகாரி டர்பன் நகரில் ஆலோசகராகப் பணியாற்றி வந்ததாகவும் இவரே மண்டேலா டர்பன் நகருக்கு இன்று காரில் செல்வதாக அதிகாரிகளுக்கு தகவல் சொன்னதாகவும், இச்செய்தியை இவர் ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரஸில் உள்ள ஒரு உறுப்பினர் ஊடாகப் பெற்றுக்கொண்டதாகவும் சொல்லப்பட்டது. செய்திகள் வெளியாகத் தொடங்கி ஒரு ஆண்டின் பின் தனது பிரியாவிடை நிகழ்வில் மதுபோதையில் ரிக்காட் தனது சகாக்களிடம் தான் அன்று இரவு மண்டேலாவைச் சந்திக்க இருந்ததாகவும் அது தொடர்பான செய்தியையே தான் பொலிசாருக்குக் கொடுத்தாகவும் சொன்னார். ஆனால் இது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க ரிக்காட் மறுத்துவிட்டார்.

1986 இல் இச் செய்திகள் வெளியாகியவுடன் CBS-TV செய்தியாளர் ஏலன் பிஷ்சேயின் (Allen Pizzey) உடனான நேர்காணலில் ஊடகவியலாளர் ஜேம்ஸ் டொம்லிங்ஸ் (1962 இல் தென்னாபிரிக்காவில் இருந்தவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்காட் மண் டேலாவின் கைதில் தனக்கு பங்கு உள்ளதாக தன்னிடம் சொன்ன தாகச் சொன்னார்.

இதேவேளை 1990 =06=10 The Atlanta Journal and Constitution ஒரு செய்தியை வெளியிட்டது. அடையாளம் காட்டவிரும்பாத இளைப்பாறிய அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் மண்டேலா கைது செய்யப்பட்ட சில மணித்தியாலங்களின் பின் உயர் C.I.A அதிகாரியான போல் எக்கேல(Paul Eckel) "நாங்கள் மண் டேலாவை தென்னாபிரிக்க பாது காப்பு பிரிவினரிடம் ஒப்படைத்து விட்டோம் நாங்கள் அவர்களுக்கு எல்லா தகவல்களையும் சொல்லி யிருக்கிறோம். அவர் அணியும் உடை, அவர் எங்கெங்கு எல்லாம் செல்ல உள்ள நேரம் என எல்லாவற்றையும், அவர்கள் மண்டேலாவை கைது செய்து விட்டார்கள் எங்கள் புகழ்பூத்த சதிகளில் இதுவும் ஒன்று" என சொன்னதாகச் சொன்னார்.

மண்டேலாவின் விடுதலையின் பின் இருநாட்டுத் தலைவர்களின் சந்திப்பை முன்னிட்டு புஷ் மண்டேலாவுக்கு மன்னிப்புத் தெரிவிப்பாரா? என வெள்ளை மாளிகையில் கேட்கப்பட்டபோது "அமெரிக்காவுக்கு அந்நிகழ்வில் எவ்வித தொடர்பும் இல்லை" என திட்டவட்டமாக மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இதேவேளை வெள்ளைமாளிகைப் பேச்சாளர் மெர்லின் பிட்ஸ்வோட்டர(Marlin Fitz Waer)"இது கென்னடியின் நிர்வாகத்தின் போது நடந்தது இதற்கு எம்மைக் குறைசொல்ல முடியாது" என்றார்.

இது தொடர்பாக C.I.A "இவ்கையான குற்றச்சாட்டுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்காமல் இருப்பதே எமது குறிக்கோள்" என்றது.

நெல்சன் மண்டேலாவில் இளமையும் உடல்நலமும் மெது மெதுவாய் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் சிதைந்து கொண்டிருக்கையில் ரிக்காட் ஓய்வு பெற்று வசதியாகவும் சுதந்திரமாகவும் கொலராடாவில் Pagosa Springs இல் வாழத் தொடங்குகிறார். ஏன் இன்றும் கூட அவர் அங்கு வாழ்ந்து வருகிறார்.

மூலம்: வில்லியம் பிளம்
(William Blum)
"ROUGE STATE"
என்ற நூலிலிருந்து
தமிழில் - அ. செஞ்ஞாயிறு.

### பயில்நிலம் சந்தா விபரம்

**இலங்கை**

| | | |
|---|---|---|
| இதழின் விலை | ரூபா | 20.00 |
| ஆண்டு சந்தா | ரூபா | 240.00 |

**வெளிநாடு**

| | | |
|---|---|---|
| இதழின் விலை | $ | 1 |
| ஆண்டு சந்தா | $ | 12 |

உள்நாட்டில் பயில்நிலம் சந்தா பணத்தினை தெகிவளை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக மணியோடரில் அனுப்பி வைக்கவும்.

விநியோகக்குழு





## சிறைப்பட்ட சிந்தனைகள்

சிறுபிள்ளையில்
சிட்டாய் பறக்கையில்
சின்னம்மாவின்
சீராட்டுக்கள்
பெண்பிள்ளை
அடக்கமாய்
இருக்க வேணும்
என்று,

பள்ளி செல்கையில்
பாடங்கள் படிக்கையில்
பாட்டியின் பாடல்கள்
பருவமாகப் போகிறாய்
பக்குவமாய் இரு
என்று,

பத்தாம் ஆண்டில்
பருவக் கோளாறில்
பக்கத்தில் இருந்தவனை
பக்கவாட்டால்
பார்க்கையில்
பறந்து செல்லும் வதந்தி
பஸ்ஸில் இருவரும்
காதலாம்
என்று,

அலுவலகம் சென்று
அயராது உழைத்து
அலுப்படைந்து
வருகையில்
அயலிலுள்ளோர்



பார்வையில்
அர்த்தமற்ற கேள்விகள்
அலுவலகத்தில் ஏதேனும்
என்று,

கெட்டி மேளம் கொட்ட
கற்பனையில் திளைக்க
தாலிகட்டிய கணவனுடன்
கதைத்த பல கதைகளில்
கற்பனைகள் அத்தனையும்
கருகாகிப் போனது.

இத்தனையும் இருக்க
பட்டிமன்றங்களும், பேச்சு
முழக்கங்களும்
பாரதி கண்ட புதுமைப்
பெண்
தோன்றிவிட்டாளாம்
என்று

கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழிவின் பாதையில்



இன்றைய உலகம் தெளிவுகளற்ற குழப்பத்தில் மூழ்கி கிடக்கிறது. அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்ட நெருக்கடிகள் மனித சூழலின் சமநிலையை பாதித்துள்ளது. எல்லா இடத்திலும் குழப்பம், இனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. மீண்டும் போர்த்தீ கிளர்ந்தெழுகிறது. அறிவியல், தொழில் நுணுக்கம், தொழில் துறை ஆகியன மீதான நம்பிக்கையும் அவை உண்டாக்கும் சிக்கல்களும் மோதிக் கொள்கின்றன. அறிவியல் பொழுது போக்கு மட்டுமல்ல. அறிவியலும், தொழில் நுணுக்கமும், அறியாமையும் குருட்டுத்தனத்தையும் உருவாக்குகிறது. அறிவியலின் பல்வேறு துறைகள் பயனுள்ள பலன்களைத் தந்துள்ள போதிலும் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன.

**பொ. கோபிநாத்**

உலகானது சாதாரண பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதாக தெரியவில்லை. அது அழிவுப்பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. இன, நிற, மத, தத்துவார்த்த மோதல்களால் போர்கள், படுகொலைகள், சித்திரவதைகள், வன்கலவிகள், பழிவாங்கல்கள் என்ற குற்றங்கள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. மனிதப் பண்புகள் மறைந்து மிருகப் பண்புகள் தலை காட்ட ஆரம்பித்துள்ளன.

இறந்தகால, எதிர்கால பிரச்சினைகளுக்கு ஒரே சமயத்தில் முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதோடு வளர்ச்சிப் படிகளாக அடையாளங்காட்டப்படும் பூகோளமயமாதல், அறிவியல் கண்டுபிடிப்புக்கள் (உ + ம் சிறு ஆயுதங்கள், அணுவாயுதங்கள் ) என்பன மறைமுக, நேரடி உலகத்தின் மரண கருவியாக தொழிற்படுகின்றன. இவை நாடுகளுக்கிடையே பிளவுகளை ஏற்படுத்தும் காரணியாகவும் அமைந்து விடுகிறது.

இந்தியாவும், பாகிஸ்தானும் தன்னுடைய ஆயுத பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள எல்லைக் கிராமங்களில் நடாத்திவரும் அணு ஆயுத பரிசோதனைகள் அத்துடன் கடந்த மாதத்தில் (செப்ரெம்பர்) சீனாவின் எல்லைக் கிராமத்தில் நடாத்தப்பட்ட பரிசோதனை, ஈரானில் நடாத்தப்பட்ட அணுஆயுத ஏவுகணை பரிசோதனை என அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த அணு ஆயுத ங்களின் பாவனை சூழலில் ஏற்படுத்தியிருக்கும் விளைவு களுக்கு ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாக்கி பிரதேசங்கள் பதிலாக இருக்கின்றன. 2ம் உலக மகா யுத்தத்தில் அமெரிக்காவின் அணு ஆயுத தாக்குதலால் குறையுடையவர்களாக பிறந்த குழந்தைகள் என்ற நிலை மாறி இப்போது தான் பச்சைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லொன்று முளைத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க சிறு ஆயுதங்களின் பாவனை மறுமுனையில் உயிர்ச்சமநிலைக்கு சவாலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்குள் குறிப்பாக நகரப்புறப் பிரதேசங்களில் வன்முறை காரணமாக பிரேஸிலில் வாழ்ந்த சுமார் 300,000 மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். அத்தோடு நமது நாட்டைப் பொறுத்த வரையில் கடந்த மாதங்களில் நடந்த உயிர்க்கொலைகளையும் எடுத்துக் காட்டாக கொள்ளலாம்.

ஆனால் இவற்றிலிருந்து வேறுபட்டு திருப்தி அளிக்கக் கூடிய ஒரு சம்பவம் 2000.03.15 திகதியன்று நைரோபியில் நடைபெற்றது. அதாவது மேற்குறிப்பிட்ட திகதியன்று 1000 ஆயுதங்களை அடையாளமாக தீ வைத்தமை மூலமாக சிறு ஆயுதங்கள் மற்றும் மென்ரக ஆயுதங்கள் சம்பந்தமான பிரகடனத்தை கைச்சாத்திட்ட 3 ஆண்டுகள் நிறைவு விழாவைக் கென்யா கொண்டாடியது.

இப்படியாக உயிர்களின் இருப்பிடம் எனும் தன்மையை பூமி இழந்து வருகிறது. மனித உயிர் களுக்கான பொதுவான வீடு நாமறிந்தவரையில் பூமியே. அதிலேயே பிரஜாவுரிமையின்மை, அகதிநிலை போன்ற நிலைப்பாடுகள் வேதனையை தோற்றுவிக்கின்றன.

இவ்வுலகின் ஆண்டைகளாக தம்மை நிறுவிக் கொள்ளும் முயற்சியில் வல்லரசுகள் உலக சமநிலையை குழப்பி வருகின்றன. சான்றாக இன்றைய தினங்களில் உலக சமநிலைப் பற்றிய கேள்வியை எழுப்பியிருக்கும் அமெரிக்காவின் வளைகுடா நாடுகளின் மீதான தாக்குதலை எடுத்துக் கொள்ளலாம். ஆப்கானிஸ்தான், ஈராக் என்று தொடரும் அமெரிக்காவின் தாக்குதல் அடுத்து எந்த நாட்டின் மீது திரும்பும் என்று உலக நாடுகள் நடுக்கத்துடன் காத்திருக்கின்றன.

இது நமது சிந்தனையையும், கல்வியையும் சீர்திருத்தம் எனும் சிக்கலுக்கு இட்டுச் செல்கிறது. பல்வேறாக பிரிந்துள்ள கருத்துக் களையும், துறைகளையும் இணைக்கக்கூடியதாக சிந்தனை அமை வதே சிறந்தது. நமது பூமி இயற்கை, விலங்குகள் மட்டும் கொண்டதல்ல. சிக்கலான இயற்பியல், உயிரியல், மானிடவியல் முழு மையாகும்.

வரலாற்றுப் போக்கில் இயலாதவைகள் எல்லாம் நனவாக்கப்பட்டுள்ளதை நாம் காண முடியும். மனிதமூளை முழுமையாக பயன் படுத்தப்படவில்லை என்பது இப்போது தெளிவாகிறது. ஆனால் அறிவியல் ரீதியான உறுதியும், வரலாற்றின் உறுதிகளும் இல்லையென்றால் அது நிச்சயமற்றதாகிவிடும்.

# மனித உறவுகளும் தொடர்பாடலும்

**கொழும்பு தமிழ் சங்கத்தில் 15-09-2004 S.J.யோகராஜா அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்**

நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாய் வாழ ஆசைப்படுகிறோம். ஆனால் நாங்கள் மகிழ்ச்சியை எமக்குள் வைத்துக் கொண்டு வெளியே அதைத் தேடி அலைகிறோம். இந்நிலையில் எமக்குள்ளேயே இருக்கும் மகிழ்ச்சியை எவ்வாறு அடைவது என்பதே கேள்வியாய் நிற்கிறது. பணம் உழைப்பதற்காக நாம் எடுக்கும் கவனத்தையும், படும் கஷ்டத்தையும் மனித உறவுகளை சீராகப் பேண என்றாவது நாம் பயன்படுத்தியிருக்கிறோமா? புதிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள மட்டுமன்றி இருக்கின்ற உறவுகளை தொடர்ந்து பேணவும் உடைந்த உறவுகளை புதுப்பிக்கவும் தொடர்பாடல் என்பது மிகவும் அவசியமாகிறது.

தற்கொலைகளுக்கான காரணங்களைத் தெளிவாக ஆராய்கின்ற போது அவை பொருளாதாரப் பிரச்சினைகளாக இருப்பதை விட பெரும்பாலும் மனித உறவுகளுக்கிடையிலான பிரச்சனைகளாகவே அனேகமாக அமைகின்றன. எனவே மனித உறவுகள் சிதைவடைவது எவ்வளவு பயங்கரமானது என உணர முடிகிறதல்லவா?

இன்று அநேகமான கலந்துரையாடல்கள் குடும்பங்களில் முரண்பாடுகளிலேயே தோற்றம் பெறுகிறது. உதாரணமாக கணவன் மனைவி உரையாடற் தொடங்கும்போது யாராவது ஒருவர் மற்றவர் தொடர்பிலோ அல்லது மற்றவர் உறவுகள் தொடர்பிலோ குற்றம் சாட்டுதலிலேயே பேச்சுத் தொடங்குகிறது. எனவே அவர் தன்னைப் பாதுகாக்கும் முகமாகவே தனது உரையாடலை மேற்கொள்ள முனைகிறார். எனவே அவ்வுரையாடல் கலந்துரையாடலாக இன்றி ஒரு தர்க்கவாதமாக அமைய, வார்த்தைகளின் வலியால் மனக்கசப்பு விளைவாகிறது.

எனவே உரையாடத் தொடங்கும்போது எதைப் பற்றிக் கதைப்பது என்ற தெளிவு இருக்க வேண்டும் இருவரும் உரையாடும் விடயமானது இருவருக்கும் தேவையானதாக இருவருக் கும் பொதுவானதாக இருவரும் விரும்ப க்கூடியதாக இருக்க வேண்டும். அப்போது மட்டுமே உரையாடல் மகிழ்வானதாகவும் சிக்கலற்றதாகவும் இருக்கும். உரையாடலின் போது மற்றவர் களின் உணர்வுகளை உள்வாங் கக்கூடிய தன்மை இருத்தல் வேண்டும். அப்போதே அவர்களின் உணர்வு நிலைகளை புரிந்து சொல்லாடல்களையும் கருத்தாடல்களையும் பயன்படுத்த முடியும்.

மற்றவர்களது உணர்வுகளை உள்வாங்குதல் அல்லது புரிந்து கொள்ளுல் எனப் படுகின்ற போது இதற்கு அடிப்படையான ஒரு அம்சத்தை நாம் தெளிவாக உணர்ந்திருத்தல் அவசியம். நீங்கள் உங்களைப் பற்றித் தெளிவாக உள்வாங்கி வைத்திருக்கிறீர்களா? அவரவர்கள் தங்களைப் பற்றியும் தங்களது உணர்வுகள் பற்றியும் தெளிவாக உள்வாங்கி வைத்திருக்கும்போது எம்மால் மற்றவர்களை உணரவோ உரையாடவோ முடிகிறது. சூழ்நிலைகளைக் கையாளுதல் (Situtation Handling) என்பதில் தங்களை தாங்கள் உணரல் மிகவும் முக்கியமானது.

'நான்' என்பதும் நான் செய்வதும் சொல்லுவதும் சரியானவையே என்ற எண்ணப்பாங்கு மகிழ்ச்சிகரமான உரையாடலுக்குத் தடையாகிறது. 'நான்' என்பது மேலோங்கும் போது மற்றவர்களைப் பற்றியோ அல்லது நாம் சொல்வதைப் பற்றியோ கவனம் செலுத்தப்படமாட்டாது. இது மிகவும் கொடுமையானதல்லவா?

மனித உறவுகளின் தொடர்பாடலில் எதிர்பார்ப்புகளுக்கும் விளைவுகளுக்கும் இடையிலான வேறுபாடு பெருத்த விளைவுகளை உடைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. ஒரு மாணவன் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையின் பெறுபேற்றை தந்தையிடம் வந்து மகிழ்வாக "எனக்கு அப்பா 9A யும் 1B" யும் எனச் சொல்லுகின்றபோது "ஏன் என்ன பாடத்துக்கு B" எனக் கேட்கும்போது அம் மாணவனது மனம் நொருங்கிவிடுகிறது. எனவே அவன் எதிர்பார்ப்புக்கும் விளைவுகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிப்பதற்கு தொடர்பாடல் முறையின் குறைபாடே காரணம்.

மனித உறவுகளை பேணவோ, புதுப்பிக்கவோ, அல்லது ஆரம்பிக்கவோ தொடங்குகிற போது எதிலிருந்து தொடங்குவது என்ற கேள்வி தோன்றுகிறதல்லவா? அதற்கு கிடைத்ததிலிருந்து தொடங்கக்கூடிய இயல்பு எம்மிடம் இருக்க வேண்டும் அல்லது அவ்வியல்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் அப்போதே பயன் தரு உரையாடல்களையும் பயன் தரு உறவுகளையும் பேண முடியும்.

பயத்தை நீக்கி பாதுகாப்பை வழங்குதல் என்பது மனித உறவுகளை பேணும் தொடர்பாடலில் மிகவும் முக்கியமானதாகும். குழந்தை (பிள்ளை) அச்சப்படுகின்ற விடயங்களுக்கு அவர்களுக்கு நாங்கள் மேலும் அவ்விடயம் தொடர்பில் அச்சத்தை அதிகரிக்காமல் அது தொடர்பான விளக்கங்களை அளித்து பிள்ளையின் பயத்தை நீக்கி பாதுகாப்பை வழங்க வேண்டும்.

எனவே எங்களை நாங்கள் புரிந்து கொள்ளல், மற்றவர்களைப் புரிந்து கொள்ளல், சூழ்நிலைகளை உள்வாங்கல் போன்ற தெளிதல்கள் மனித உறவுகள் பேணப்படுவதற்கும் மகிழ்ச்சியான வாழ்விற்கும் வழிதரும் என்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயத்தை தேடி

கட்டுரை

கு. பாரதி

நாகரிக உலகின் நவீன மனிதர்கள் நாம் விஞ்ஞானத் தொழில்நுட்பத்தாலும் மெஞ்ஞான வளர்ச்சியாலும் விண்ணையும் மண்ணையும் தொட்டு நிற்கி றோம். உயர்கல்வி கற்று, பண் பாடு மிகுந்தவராய் கருதப்படுப வர்களாகிய நாம் 'மனித நேயம்' எனும் சொல்லுக்கு அர்த்தம் தேடக் கூட முடியாதவர்களாய் அதிவேக உலகில் கண்மூடித்தனமாய் பய ணித்துக்கொண்டிருக்கிறோம். ஆதியில் மனிதன் ஒன்றுபட்டு வாழ்ந்தான். உலகைப் புதுப்பித் தான்.அதே மனிதன் இன்றைய உலகைப் புதுப்பிக்க நினைத்து அடுத்தவருடன் பேசக்கூட நேர மின்றி வாழ்ந்து கொண்டிருக் கிறான்.

"பக்கத்திருப்பவர் துன்பம்
தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணிய
மூர்த்தி"

என்றார் பாரதியார்.

பிறர் துன்பம் பார்க்கப் பொறாதவன் மனிதன் என எண்ணிய காலம் போய் பிறர் துன்பப்படும்போது பார்க்காமல் இருப்பவனே மனிதன் என நினை க்க வைத்துள்ளது இன்றைய உலகு.

பணமொன்றே குறிக் கோளாய் நாளும் அதைத் தேடி மனித நேயத்தையும் தொலைத் ததால் உலகில் இன்று பயங்கர வாதம் தலைவிரித்தாடுகிறது. அண்மையில் ரஷ்யாவில் நடந்த தீவிரவாத தாக்குதலில் ஏராளமான பள்ளிமாணவர்கள் பலியானது மனித நேய அழிவு முகத்தின் எடுத்துக்காட்டாகும். ஒருவருக் கொருவர் தொடர்பின்றி இருப்ப தால் பொழுது போக்காய், மகிழ் வாய் இருப்பதற்காக கிடைக்கும் நேரம் கூட இவர்களுக்கு கிடைப் பதில்லை. இயந்திர மனிதராய் உணர்வின்றி வாழ்கின்றனர் இன்றைய மனிதர்கள்.

நாம் ஒவ்வொருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்து, அடுத்தவர் இன்ப துன்பத்தில் கலந்து கொள்வதால் மட்டுமே மனிதநேயத்தை வளர் க்க முடியும். தன்னுயிர் போல் பிறரையும் நேசித்தல் மனிதனுக் குரிய குணங்களில் சிறப்பான தாகும். கல்வி கற்பதால் மட்டும் மனித நேயம் வளர்வதில்லை. மனிதராய் பிறந்த ஒவ்வொரு வரும் தம் சுய புத்தியால் மனித நேயத்தை வளர்க்க வேண்டும். உலகில் சிறந்த பிறப்பான மனிதப் பிறவியை எடுத்த நாம் நமது மனித நேயத்தால் உலகை யே கட்டி ஆளலாம். மனித நேயத்தின் சிறப்பை உலகிற்கு உணர்த்திய விளக்கேந்திய பெருமாட்டி புளோரன்ஸ் நைற்றி ங்கேல், அன்னை தெரேசா, இள வரசி டயானா வரிசையில் இன் றும் பலர் வளர்ந்து கொண்டிருக் கின்றனர். பல உதவி வழங்கும் நிறுவனங்கள், அநாதை இல்லங் கள் இன்றைய மனித நேயத்தின் சான்றுகளாகும். ஆனால் தற் போது அநாதை இல்லங்கள் பணத்திற்காக மட்டும் இயங் குபவையாகவும் மனித உரிமை மீறல்களில் இருப்பிடங்களாகவும் மாறிவருகின்றன. இதை உடனடி யாக தடுத்து நிறுத்தி மனித நேயத்தை நிலைநாட்டுதல் மக்க ளின் கடமையாகும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது முதுமொழி. ஒன்றுபட்டாலே உயர் வாழ்வு கிட்டும். தனிமை யாய் வாழ்ந்து நாம் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. எதிர்கால தலைவர்களான இன்றைய சிறுவர்களுக்கு மனித நேயத்தின் முக்கியத்துவத்தினை புரியவைப் பது இன்றைய இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது. நாளைய உலகில் மனித நேயம் வளர நாமும் ஓர் தூணாய் வாழ்ந் திடுவோம்.

## எல்லாமாய்

வட்டத்தின் மையமாய்
இருந்தது என் மனசு
அறிமுகமானாய்-நீ
எனக்கு

சதுரத்தின் மையமானேன்
சில பொழுதுகளில் - நான்

காலப்போக்கில் - உன்னுடனான
பழக்கங்களில் நான்
முக்கோணியின் மையமானேன்

இறுதியில் - நாங்கள்
பயணிக்கின்றோம் - சேர்ந்து
சமாந்தரமாய்

- மீநிலா -

## 10 வினாக்கள்

1. தமிழில் அச்சிடப்பட்ட முதல் நூல் எது?
2. தமிழில் ஒப்பிலக்கியம் என்ற துறையை அறிமுகப் படுத் தியவர் யார்?
3. 1956 பொதுத் தேர்தலில் 2 தொகுதிகளில் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகிய இலங்கையர் யார்?
4. "தத்துவத்தின் வறுமை" என்ற நூலை எழுதியவர் யார்?
5. ஜீ-4 (G-4) வில் உள்ளடங் கும் நாடுகள் எவை?
6. ஹெல்சிங்கியை தலை நகராகவுடைய நாடு எது?
7. அண்மையில் இந்தியாவால் விண்ணுக்கு ஏவப்பட்ட கல்வி விண்கலம் யாது?
8. யப்பானினுடைய பாரா ளுமன்றம் என்ன பெயரி னால் அழைக்கப்படுகிறது?
9. அங்கவீனமுற்றவர்களுக் கான ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்ட ஆண்டு யாது?
10. இலங்கையில் தயாரிக் கப்பட்டு வெளியான இறுதித் தமிழ் திரைப்படம் எது?

மேற்தரப்பட்ட 10 வினாக்களுக் கும் சரியான பதிலை எழுதி அனுப்பும் முதல் 5 நபர்களுக்கு நூல்கள் பரிசாக வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உலகம் ஓர் மொழி



ஆழ் கடலில்
முக்குளித்து
பெற்றெடுத்த
முத்துக்களாம்
குழந்தைகள்
நாம்.

வேற்றுமைகள்
நிறைந்திருக்கும்
உலகினிலே
ஒற்றுமையை
உணர்த்திடுமாம்
நம்மொழி.

கோபங்கள்
குரோதங்கள்
பொறாமைகள்
அறியாத குழந்தைகள்
நாம்.

இளஞ் செடியில்
சிறுமொட்டாய்
கருவாகி
புது மலராய்
பூத்த பூக்கள்
நாம்.



ஜாதி அறியா
பேதம் அறியா
வெள்ளை மனம்
படைத்த
குழந்தைகள்
நாம்.

நாமொன்றாய்
கைகோர்ப்போம்
ஒற்றுமையாய்
உருவாக்கிடுவோம்
ஓர் உலகம்
ஓர் மொழி



ஆஷிகா -

(பிள்ளைகள் தினத்தை முன்னிட்டு)

# தலை வணங்குகிறேன்

நீ சென்ற பாதையில் - நான்
தூய்மையை உணர்கின்றேன்.

நீ சென்ற பாதையில் - நான்
சுகந்தத்தை உணர்கின்றேன்

நீ சென்ற பாதையில் - எனக்கு
சுவர்க்கமாகவே தெரிகிறது

நீயில்லாத உலகம்....?

நினைத்தும் பார்க்க
முடியவில்லை

இந்த உலகை ஆள
கோடி கோடி மானிடர்
வரலாம் - ஆனால்
நீ மட்டும் இல்லையேல் - இந்த
உலகம் சீரழிந்து விடுமே!

உன்னால் தானே
இந்த பூமியே இயங்க
ஆசைப்படுகின்றது!

உன் சிறந்த கரங்களால் தானே
பூமி சுவர்க்கமடைகிறது

உன் வியர்வையில் தானே
சூழல் குளித்து
சுத்தமாகின்றது.

ஆம், துப்பரவுத் தொழிலாளியே
கோடி கொடுப்பினும் - அவை
உனக்கீடாகுமா?
உண்மை சேவகன் உனக்காக
என் சிரம் தாழ்வதில்
பெருமை கொள்கிறது.


- சசிகலா -





# நீதியின் பெயரால்

ஞானசீர்த்தி மீநிலங்கோ



ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு அரை நூற்றாண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இக்காலப்பரப்பில் ஐ.நா. சமாதானத்தை நிலை நாட்டுவதில் வெற்றி கண்டுள்ளதா? என்ற கேள்வி தொக்கி நிற்கையில் அதனுடைய இன்னொரு துணை அமையம் பற்றிப் எழுதலாம் எனக் கருதுகிறேன். 1998 இல் ரோமில் 138 நாடுகளின் ஒப்புதலுடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தோற்றம் பெற்றது. சர்வதேச போரியல் கொலைகள் மற்றும் இனப்படுகொலைகள் போன்றவற்றைக் கையாளவே இந்நீதிமன்றம் உருவாகியது. திட்டவரைவின் அடிப்படையில் மிகவும் சிறந்த திட்டமாகத் தென்படினும் நடைமுறைப் பிரயோகம் என்கின்ற போது அது வேறுபட்ட கதையாகவே உள்ளது. வழமை போலவே இம்முறையும் அமெரிக்காவாலேயே சிக்கல் ஏற்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் டிசெம்பர் 2000 ஆம் ஆண்டு அமெரிக்கா சார்பில் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். ஆனால் இவ் உடன்படிக்கையின் சில பகுதிகளுக்கு அமெரிக்க செனட் அங்கீகாரம் கொடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புஷ்சின் நிர்வாகம் இந்நீதிமன்றை நிராகரித்தது. இந்நீதிமன்றமானது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை எதிர்க்கும் நாடுகளால் ஒரு உபகரணமாக அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சமே இந்நிராகரித்தலுக்கான காரணம். ஏனெனில் ஏற்கனவே யுத்தப் படுகொலைகளை புலனாய்வு செய்வதற்கு ருவாண்டா மற்றும் கொசோவோ பகுதிகளுக்கு அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்களைப் போலன்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எல்லை வரையறையற்ற பூகோள ரீதியில் நீதி வழங்கும் அதிகாரத்தை உடையது. 2002 மேயில் புஷ்சின் நிர்வாகம் இவ்வுடன்படிக்கையில் இருந்த விலகிக் கொண்டது. அதற்கு முன்னராக ஐ.நா.வின் சமாதான நடவடிக்கைகளை தனது "வீட்டோ" அதிகாரத்தின் மூலம் நிறுத்தப் போவதாகவும் தங்களுக்கு நீதிமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்புகளில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டும் எனவும் பயமுறுத்தியது. இதில் நோக்க வேண்டிய விடயம் எதுவெனில் ஐ.நா. அமைதிகாக்கும் 47,000 படைவீரர்களில் 700 பேரையே அமெரிக்கா கொடுத்து உதவியிருக்கின்றது. எல்லாவற்றையும் தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடங்குவதற்கு முதல் நாள் அமெரிக்கா, 1995 இல் "டெய்ரோன்" சமாதான உடன்படிக்கை மூலம் உருவாக்கப்பட்ட பொஸ்னிய அமைதிகாக்கும் செயற்பாட்டுக்கு தனது வீட்டோ அதிகாரம் மூலம் தடைவிதித்தது.

விமர்சகர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பட்டயத்தில் இருக்கின்ற குறைபாடுகள் புஷ்சின் நிர்வாகம் பயப்படுகிற மாதிரியான விளைவுகளிலிருந்து தப்பிக்க உதவும் எனக் கூறுகிறார்கள். இந் நீதிமன்றின் நீதிவழங்கும் தன்மையானது பல்கிப் பெருகிய ஒழுங்குமுறையிலான அடக்குமுறைகளுக்கெதிராக குற்றங்களையே விசாரிக்கும் தன்மையுள்ளது. ஆனால் தனிப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்க முடியாது. உதாரணமாக தவறுதலாகப் போடப்பட்டதாக அமெரிக்கா சொல்கின்ற ஆப்கானிஸ்தானிய திருமண நிகழ்வில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் போன்ற நிகழ்வுகளுக்கு அல்ல. ச.கு.நீ நீதி வழங்கும் தன்மையைக் கொண்டுள்ள போதிலும் சிறிய குற்றங்கள் தொடர்பில், குறித்த நாடு விசாரித்து தண்டனை வழங்க மறுக்கும் இடத்தோ அல்லது பொய்மையான வழக்கை ஒரு நாடு நடாத்தியுள்ளது என காட்டப்படுமிடத்தோ மட்டுமே ச.கு.நீ ஆல் செயற்படமுடியும்.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையினால் நிறைவேற்றப்பட்ட 1422 ஆவது தீர்மானத்தின்படி ச.கு. நீ பணிபுரிகின்ற அல்லது பணிபுரிந்த அமைதிப்படை அதிகாரிகளை விசாரணை செய்யவோ தண்டிக்கவோ முடியாது. ஆனால் நீதிமன்றின் கோட்பாட்டு ரீதியில் தவறு செய்கின்ற போர் வீரர்களோ, அதிகாரிகளோ, படைக்கல சேவை என்றோ, அரசின் உத்தியோகத்தர்கள் என்பதன் பெயராலோ தப்பிவிட முடியாது. இனப்படுகொலை அல்லது படுகொலைகளையோ ஒரு போர் வீரன் தனித்தோ அல்லது மேலதிகாரியின் வழிகாட்டலின் பெயரிலோ செய்திருந்தால் ஒவ்வொருவரும் குற்றவாளிகளாக கருதப்படுவார்.

நீதிமன்று தொடர்பான சிக்கல்கள் நீதிமன்றின் நடைமுறைத் தன்மை தொடர்பில் ஏற்பட்டவை அல்ல. நீதிமன்றின் நீதி வழங்கும் தன்மையானது சட்டத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான யுத்தத்தின் சின்னமாக அமைந்ததே ஆகும். நீதிமன்றின் ஆதரவாளர்கள் 20 ஆம் நூற்றாண்டின் அரசியலே கொடூரமான வன்முறைகளுக்கு வித்திட்டது என நம்புகிறார்கள். அவர்களின் பார்வையில் அரசியல் என்பது பயங்கரமானதென்பதும் அவை



யே பிரச்சினைகளின் தோற்றுவாயாக இருப்பதால் இந்த நீதிமன்றே அனைத்திற்கும் தீர்வு. இப்புதிய நூற்றாண்டில் தேசிய விருப்பங்களுக்கான அரசியல், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான விஞ்ஞானங்களை நோக்கியதாக மாற்றப்படவேண்டும். மறுமுனையில் சர்வ தேச சட்டங்களில் உறுதிப்பாடின்மையினால் நாடுகளிடையிலான அதிகரித்த இடைவெளியானது பழமைவாத அரசியலுக்கு வழி வகுக்கின்றது. இனிவரும் காலத்தில் இவ் இடைவெளி மேலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளும் போதே உலக மக்களின் வளமான வாழ்விற்கும் நலத்திற்கும் வழியமைத்து கொடுக்க முடியும்.

அமெரிக்காவின் பெண்ணிய அமைப்புகள் மத்தியில் இந்நீதிமன்றத்துக்கு பலத்த ஆதரவு இருக்கிறது. ஏனெனில் நீதிமன்றினது பால் சார்ந்த குற்றங்களையும் மனித நேயத்திற்கெதிரான குற்றங்களாக கருதுவதாகும். 7 ஆம் உறுப்புரையானது வன்கலவி, பாலியல் துன்புறுத்தல்கள், கட்டாயப்படுத் தப்பட்ட விபச்சாரம், கட்டாயப்படுத்தப்பட்ட கர்ப்பம் தரித்தல் போன்ற எல்லா வகையான பாலியல் குற்றங்கள் அனைத்தும் குற்றங்களாகவே கொள்ளப்பட வேண்டும் என கூறுகிறது. இதற்கு மேலாக தெரிவுசெய்யப் பட்ட 18 நீதிபதிகளில் எழுவர் பெண்களாகும். இவர்களுடைய வாக்களிப்பு முறையானது பால் ரீதியான மற்றும் பூகோள ரீதியான சமநிலையை பேணும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதே வேளை அமெரிக்க காங்கிரஸ் தேவைப்படுமிடத்து நீதிமன்றால் கைது செய்யப்படுகின்ற எந்த அமெரிக்கர்களையும் விடுவிக்கும் எல்லையற்ற அதிகாரத்தை அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. இவர்களது இந்த சட்டமூலத்தை "ஹேக் முற்றுகைக்கான சட்ட மூலம்" என நகைச்சுவையாக அழைப்பதும் உண்டு.

யுத்த குற்றங்களுக்காக ஸ்லொபோடான் மிலேசவிஷ் விசாரிக்கப்படலாம் என்றால் ஏன் ஹென்றி கிசின்ஜர் விசாரிக்கப்படக்கூடாது என்ற கேள்வி எழுகின்றது. அமெரிக்காவின் யுத்த கொள்கைகள் தொடர்பான திட்டமிடலுக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் ஹென்றி கிசின்ஜர் அடிப்படையானவராக அமைந்திருக்கிறார். அத்துடன் அவர் காலப்பகுதியில் தொடர்ச்சியானதும் திட்டமிட்டதுமான இரசாயன மற்றும் உயிர்க்கொல்லிகள் பாவனைக்கும் குறிப்பாக Agent orange தாவரக்கொல்லி பாவனைக்கும் பதில் சொல்ல வேண்டியவராகவே அவர் இருக்கிறார். இவற்றின் பாவனையால் வியட்னாம், லாவோஸ், கம்போடியா, போன்ற நாடுகளில் குறைபாடுடைய குழந்தைகள் தொடர்ச்சியாக பிறந்து வருகின்றன. மேலும் பல நிலப்பரப்புகள் அதிக அளவு அமிலத் தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையனவாக இருப்பதனால் வாழ்வதற்கோ பயிர் செய்வதற்கோ பொருத்தமில்லாமல் போவதுடன் அது ஒரு சுற்றாடல் கேடாகவும் மாறி வருகிறது. இதனால் வருகின்ற பல சந்ததியினர் அதிகளவு பாதிக்கப்படப் போகிறார்கள்.

முதல் 30 மாத கால நிக்ஷன் கிசின்ஜர் நிர்வாகத்தில் 35,708 வியட்னாமியர்கள் பீனிக்ஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வியட்னாமிய யுத்தத்தில் திட்டமிடுதல், பதவிகளை நியமித்தல் போன்ற பலவற்றை கிசின்ஜர் செய்திருக்கிறார். இவர் ஜெனீவா பிரகடனங்கள் தெரியாது என தப்பித்துக் கொள்ள முடியாது. இவரே திட்டமிட்டு அனுமதி வழங்கி மேற்பார்வை செய்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். மேற்கூறிய காரணங்களிற் காகவும் வேறு பலவிற்காவும் மிலோசவிஷ் யுத்த குற்றங்களுக்காக விசாரிக்கப்படலாம் என்றால் ஏன் ஹென்றி கிசின்ஜர் விசாரிக்கப்பட முடியாது.

இறுதியாக இந்நீதிமன்றின் நீதிபதிகள் மிகவும் சுதந்திரமாகச் செயற்படுமிடத்து இச்சபையின் (ச.கு.நீ-இன்) உறுப்பினர்கள் பெரும்பான்மையானவர்கள் அமெரிக்காவின் சகாக்கள் என்பதால் பதவியிலிருந்து அகற்றப்படுவார்கள். ஆகவே இப்படியான பெயரளவிலான செயற்பாட்டுக்காக எமக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அவசியம் தானா?

y யிடமிருந்து
ரூபாய் பத்தை
x பறித்துக்கொண்டான்,
அவன் கேட்க
இவன் மறுக்க
சூழல் சூடாகி
y திட்டினான்
கனமாக,
இன்னொருவன் வந்தான்
சம்பவம் தெளிந்து
இப்படிச் சொன்னான்,
ஆக
அவன் பறித்ததற்கும்
நீ திட்டியதற்கும்
சரியாய்ப் போக
பத்து ரூபாய் தான்
பிரச்சினை
மனித நாகரிகம் காக்க
தலைக்கு ஐந்தைந்தாய்
பிரித்துக் கொள்ளுங்கள்.

y ஒப்பவில்லை

சர்ச்சை வலுவில்
கூட்டம் சேர்ந்து
x நீதியை ஏற்பவன்
y கலகக்காரன் என
பெயர் மாற்றினான்
மத்தியஸ்தன்,
சிலர் திருப்தியுற்றும்
பலர் குழம்பியும்
போனார்கள்

*போப்பினுடைய "கூடுகளை விட்டு" கவிதைத் தொகுப்பிலிருந்து*



Be brave and try new things

# Lecturing System Engineering

**IBT**
581/1, Galle Road,
Colombo - 06.
insbeeta@sltnet.lk
Tel: 0115 517557

**MCS**
324, Palali Road,
Jaffna.
Tel: 0777 729127

**Branch**
375 Navalar Road,
Jaffna.
Tel: 0777 778125 / 0776 043040



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# அடி சாய்ந்த ஆலமரம்

கி. திவாகரன்

காலைக்கதிரவனும் மெல்ல மெல்ல தன் கதிர்கரங்களால் பூமித் தாயை அரவணைக்கத் தொடங்குகின்றான். "ஐயோ விடிஞ்சிட்டு, வெளிச்சம் வந்துதான் என்ன வரப்போகுது?" மணியத்தார் தலையணையில் தலையை மறுபுறம் வைத்து படுத்துக் கொள்கின்றார். அப்போது அவரது சிறிய வானொலியில் "இன்று முதியோர் தினம் நாடு பூராகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது" என்ற செய்தி கூறப்படுகின் றது. இதைக் கேட்ட மணியத்தார் "இன்று மட்டும் தான் முதியோரை கவனிப்பாங்கள், மற்ற நாட்களில் யார் தான் எம்மைப் பார்ப்பார்கள்? மற்றவர்களை நான் ஏன் குறை சொல்ல வேணும்? நான் வளர்த்த பிள்ளைகள் தான் இதுக்கு பதில் சொல்ல வேணும்" என தன்னைத் தானே தேற்றியவாறு பாயை சுருட்டிவிட்டு அறையை விட்டு வெளியே வருகின்றார்.

"என்ன மணியம் இண்டைக்கு பிந்திப்போனாய்" என அந்த முதியோர் இல்லத்தில் அவருக்கு கிடைத்த நண்பன் கந்தசாமி கேட்க, "என்ன செய்ய கந்தசாமி? முன்னுக்கு முகம் கழுவித்தான் என்ன சாதிக்கப்போறன்?" என்றவாறு, மற்ற முதியவர்கள் முகம் கழுவி வரும் வரை பொறுமையாக ஓரமாக இருந்த உரலில் உட்காந்து கொள்கின்றார். அப்போது முதியோர் இல்லத்திற்கு அருகில் உள்ள வீதியில் ஒரு சிறிய குழந்தை "அப்பா" என தனது தந்தையை அழைக்கிறது, மணியத்தார் தன் பழைய நினைவுகளுக்குள் மூழ்கின்றார்.

ஆலமரத்தில் அரண்மனை கட்டி தன் அங்கத்தவர்களோடு கதைகள் பேசும் பறவை இனங்கள், பச்சைப் பசேல் என தன் குளிர்மையால் தன் மக்களின் மனத்தை மகிழ்விக்கும் கிராமம் கல்வயல்தான் மணியத்தாரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசம். ஊரில் எந்த பிரச்சனைக்கும் தீர்வு காண அவ்வூர் மக்கள் மணியத்தாரைத்தான் அணுகுவார்கள். கோயில் திருவிழாக்கள் என்றால் முன் நிற்பது மணியத்தார் தான் இவ்வாறு பலவழிகளால் மணியத்தாரை அவ்வூர் மக்களுக்கு தெரியும். மணியத்தாரின் மனதில் இடம் பிடித்து பின்னர் மனைவியாக இல்லற பந்தத்தில் இணைந்தவள் தான் அன்னலட்சுமி. இவர்கள் இருவரினதும் இல்லறவாழ்வின் இன்பத்தால் பிறந்தவர்கள் தான் குமாரும் சங்கீதாவும். ஆசைக்கு ஒன்று அன்புக்கு ஒன்று அந்த அரண்மனைக்குள் எவ்வளவு இனிமையான அனுபவங்கள்! கால சக்கரம் உருண்டோட வாழ்க்கைச் சக்கரமும் உருண்டோடியது.

மகன் குமார் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் ஒரு பொறியியலாளனாக படிக்கும் போது மணியத்தார் எவ்வளவு கனவுகள் கண்டார். ஆனால் நடந்ததோ வேறு மகன் பொறியியல் பட்டம் முடித்து வரும் போது கையில் மணியத்தாரின் மருமகளையும் கூட்டிவந்தான். மருமகள் கொழும்பு என்பதால் மகன் குமார் அங்கேயே தங்கிவிட்டான். இடையிடையே மறக்காமல் பணம் அனுப்பினான். மகள் சங்கீதாவுக்கும் கனடாவில் சம்பந்தம் பார்த்து திருமணம் முடித்து வைத்தார். சங்கீதாவும் கனடாவில் நிரந்தரமாக தங்கி விட்டாள். மகனும் மகளும் இடையிடையே பணம் அனுப்பி வந்தார்கள். பாசத்தை அவர்களால் அனுப்பமுடியுமா? மணியத்தாரும் அன்னலட்சுமியும் பிரிவினால் ஏங்கிய நாட்களே அதிகம். பாசப்பிரிவாலோ என்னவோ அன்னலட்சுமியால் அதிக நாட்கள் வாழ முடியவில்லை. சென்று விட்டாள்.

தாயின் இறுதிச் சடங்குகளிற்கூட குமாரும், சங்கீதாவும் கலந்து கொள்ளவில்லை. பணத்தையே பரிசாக அனுப்பி வைத்தார்கள். இறுதியில் அன்னை முகம் பார்க்காதவர்களுடன் இனி என்ன தொடர்பு? என தனது இரு மக்களுடனும் உறவை துண்டித்துக் கொண்டார். பல கதைகள் பேசி பட்டாம் பூச்சிகள் திரிந்த இந்த அரண்மனைக்குள் தனி மரமாக தான் வாழ்வதை எண்ணி நன்றாகவே வாடிப்போனார்.

வயதும் செல்லச்செல்ல தானாகவே மனிதனை ஆட்படுத்தும் நோய்கள், மணியத்தாரை ஆட்படுத்த தவறவில்லை. பல நோய்களால் பிடிக்கப்பட்ட மணியத்தாரை தூரத்து உறவினர் ஒருவர்தான் இந்த முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டார். "என்ன மணியம் என்ன சாதனை செய்யப்போகின்றாய்?" என்ற கந்தசாமியின் குரலால் தன் நினைவுகளிலிருந்து மீண்டு கொள்கின்றார். முகம் கழுவிவிட்டு "இந்தக் கட்டைக்கு யார் தான் கொள்ளி போடுவாங்கள்" என வாய்க்குள் முணுமுணுத்தவாறு தன் அறைக்குள் சென்ற போது அவரது சிறிய வானொலியில் முதியோர் தினத்தை ஒட்டி கவிதை ஒன்று வாசிக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

பூத்தகொடி பூக்கள் இன்றி
தவிக்கின்றது
பூங்குருவி கிளைகள் இன்றி
அலைகின்றது
ஆலமரம் வேர்களின்றி
அழுகின்றது
அந்தரத்தில் பறவை பறக்கின்றது
ஆதரிக்க யாருமில்லை
அரவணைக்க யாருமில்லை
தேற்றிருந்த சொந்தமெல்லாம்
நெஞ்சினிலே இன்று இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு உங்கள் கைகளில்

நாம் தற்போது எதிர்நோக்குகின்ற மின் உற்பத்திப் பிரச்சனைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய போதுமான நீரைப் பெற முடியாமையே அடிப்படை காரணமாகும். இருப்பினும் பல சமூக அரசியல் பொருளாதார விடயங் களும் இதற்கு வழியமைத்துள்ளன என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் சக்தி நெருக்கடிக்கு அடிப்படையில் மிக முக்கியமான 3 காரணிகளைக் குறிப்பிட முடியும்.

1. காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள மழை வீழ்ச்சிக் குறைவு. இதன் விளைவால் நீரேந்து பகுதிகளில் மழை வீழ்ச்சி 20-40% வரை குறைவடைந்துள்ளது.

2. வேறு தேவைகளுக்கான நீர்ப்பாவனையால் 5- 10% வரையிலான சேமிப்பு நீர்த்தேக்கங்களில் குறை வடைகிறது.

3. நீர்த்தேக்கங்களின் வண்டல்தன்மை (SEDIMENTATION) 20-40% வரை கட்டப்பட்டதிலிருந்து இன்றுவரை குறைவடைந்து வந்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் மழைவீழ்ச்சி தொடர்ச்சியானதாகவோ அல்லது ஒரேயளவானதாகவோ இருப்பதில்லை. இதனை கட்டுப்படுத்தும் தன்மையற்றவர்களாகவே இன்றும் நாங்கள் இருக்கின்றோம். இதன் விளைவால் நாம், நிலமானது மழைவீழ்ச்சிக் காலப் பகுதியில் அதிகளவு நீரைத் தேக்கி (உறிஞ்சி) வைத்திருக்கக் கூடிய வழிவகைகளைத் தேட வேண்டும். இதிலே குறிப்பா கக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமெதுவெனின் கடந்த நான்கு தசாப்தங்களில் கடலுக்கு வீணாகிச் செல்லும் மழைநீரின் அளவு பெருமளவு அதிகரித்து வந்துள்ளமையே. எனவே மண்ணின் வடிகட்டும் தன்மை அதிகரிக்கப்படும்போது அது வண்டல் தன்மையை நீர்த்தேக்கங்களில் பேணப் படுவதற்கு உதவும்.

**ஆ. பகலவன்**

இலங்கையின் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் யாவும் மகாவலியையும் அதை அண்டிய நீரேந்து பிரதேசங்களிலும் அமைந்துள்ளது. இப்பகுதிகள் கடந்த நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகளாக தேயிலை, இறப்பர், புற்தரைகள், காடுகள் என்பவற்றால் சூழப்பட்டிருந்தது. ஆனால் செயற்கைப் பானங்களின் ஆக்கிரமிப்பு, மேலைநாடுகளில் அதிகரித்த பால் உற்பத்தி என்பன தேயிலையின் மதிப்பை இழக்கச் செய்தது. அவை தேயிலை விலைகளுடன் போட்டியிடத் தொடங்கின. இதன் விளைவால் மெதுவான ஆனால் தொடர்ச்சியான தேயிலைத்தொழிலில் சரிவு ஏற்படத் தொடங்கியது. இதேபோலவே செயற்கை இறப்பரின் அதிகரித்த உற்பத்தியும் மலிவும் தேயிலையின் நிலையையே இறப்பருக்கும் (இயற்கை) ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

1973 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட நிலச்சீர்த்திருத்தங்கள் பல வெளிநாட்டு கம்பனிகளின் வெளியேற்றத்துக்குக் காரணமாகியன. இவை தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப் பட்டதை விரும்பவில்லை. சுதேச முதலாளிகளின் தோற்றத் தின் விளைவாக தேயிலைத் தோட்டங்களின் நிலை கொஞ்சம் கொஞ்சமாக சீரழியத் தொடங்கியது. சுற்றாடற் தேயிலையின் விலையும் படிப்படியாக சர்வதேச சந்தையில் குறையத் தொடங்கியது. முதலீடுகளும் திட்டங்களும் மக்கள் நலன் பேணல் அடிப்படையில் செய்யப்படுவதாக வேடமிடத் தொடங்கின. மண்சரிவினால் ஏற்படுகிற தீமைகள் குறித்து கவனம் செலுத்தவேயில்லை.

இதன்நிலை 1960-1980 காலப்பகுதியில் அதிகரித்த சனத்தொகையால் மேலும் தீவிரமடைந்தது. சனத்தொகையின் விளைவால் படிக்கட்டு முறைப் பயிர்ச்செய்கை, பாழான பயிரீட்டு நிலத்திலும், நீர்தேக்க துணைப் பகுதிகளிலும் (Reservoir Conservation Areas) விவசாயம் தொடங்கப்பட்டது. இவ்வகையான செயற்பாடுகள் இலங்கையின் எதிர்கால நீர் வளத்தை பாதிக்கும் என அறிந்திருந்தும் எவ்வித நடவடிக்கைகளையும் பொறுப்பானவர்கள் மேற்கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கது.

மேலைநாடுகளில் மண்ணையும் வண்டல் தன்மையையும் காக்கும் முறைகள் வீட்டுத் தோட்டங்கள், பண்ணை நிலங்கள் போன்றவற்றிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. வலிமையான சட்டங்களுடன் கூடிய விவசாய நிலப் பாதுகாப்பு பாரிய வடி காலமைப்பு முறைகள் போன்றவற்றை வளர்ச்சியடைந்த நாடுகளில் காணலாம். இவை மிகுந்த பயன்தரக் கூடியவை. ஆனால் இவை மிகுந்த செலவிலேயே அமைக்கப்பட வேண்டும் என்ற வாதமும் இல்லாமல் இல்லை. வேலையற்ற வினைத்திறன் அற்ற மக்களை ஒன்றிணைத்து கிராமங்கள் ரீதியில் இதற்கான செயற்பாடுகள் தொடங்கப்படல் வேண்டும். எங்கள் தேசம் கிராமங் களிலேயே வாழ்வதால் கிராம மக் களை ஒன்றிணைப்பதும் அங்கிரு ந்து நீண்ட கால நோக்கில் நீர்மின் உற்பத்திக்கு வலுச்சேர்ப்பதுமே எங்கள் நோக்கமாய் அமைய வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணியம் கருத்து மேடை - 01.

ஆண் பெண் உறவில் கணவன்- மனைவி என்பது ஒரு வித்தியாசமான பரிமாணம். இப் பரிமாணத்தில் சமத்துவம் என்பது மேம்பட வேண்டும். அவ்வகையில் வீட்டு வேலைகளில் கணவன்-மனைவி இருவரும் பங்குபற்ற வேண்டும். இருவரும் சமமாக வேலைகளில் ஈடுபட வேண்டும் என்பதே பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.
ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகிறதா?
கணவன் வேலை முடித்து வீடு வருகின்றான். மனைவி தன் இரவு வேலைகளில் கணவன் பங்கு பற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றாள். கணவனோ களைப்பை காரணம் காட்டி வேலை செய்ய மறுக்கின்றான். மனைவி விரக்தி அடைகின்றாள். மனைவி கேள்வி கேட்க பிரச்சினை தொடங்குகிறது”

**பு**ரிந்துணர்வுடன் இருவருக்கிடையில் ஏற்படும் நம்பிக்கையான உறவை திருமணம் எனலாம். இதில் ஆண் பெண் இருவரும் சமமான பங்கு வகிக்கின்றனர். குடும்பப்பாரத்தை இருவரும் சரிசமனாக தாங்க வேண்டும் என்பதே எனது கருத்து. அந்த காலத்தில் பெண்களை விட ஆண்கள் உயர்ந்தவர்களாகவும் ஆண்களின் கீழ் பெண்கள் வாழவேண்டும் என்ற அடக்கு முறையும் காணப்பட்டது. ஆனால், இன்று படிப்படியாக இந்நிலை மாறி வருகின்றது. பெண்களும் இன்று வேலைக்கு செல்கின்றனர். சரியாக கூறப்போனால் ஆண்களுக்கு சரிசமனாக பெண்களும் உள்ளனர். இந்நிலைமை ஒரு குடும்பத்தில் காணப்பட்டால் ஆண்கள் பெண்களின் வேலையில் பங்குபற்றுவதில் தவறேதும் இல்லையே?

**மு. கிருஸ்ணவேணி**
**கொ.விபுலானந்தா வித்தியாலயம்**

**ஆ**ண் பெண் சமத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்துவது கடினம். ஏனெனில் ஒரு குழந்தையை பராமரிப்பதில் தந்தையை விட தாயாருக்கே சாதாரணமாக ஈடுபட முடியும். காரணம் ஆண்களை விட பெண்களுக்கே - பொறுமை, அன்பு, ஆதரிக்கும் மனப்பாங்கு, என்பன அதிகம். மேலும் நம் நாட்டில் பெண்கள் வேலைக்கு சென்று வர ஒரு துணை தேவைப்படுகின்றது. காரணம் பெண்கள் தனியாக நினைத்த நேரத்தில் தனியாக சென்று வருவது என்பது ஒரு விஷப்பரீட்சை என்றே கூறலாம் மேலும் ஒரு கணவன் வேலையிலிருந்து வீடு வரும்போது அவன் மனைவியிடமிருந்து அன்பையும், வரவேற்பையும் எதிர்பார்ப்பது இயல்பு. எனவே அவ்வழியே நடந்து கொண்டால் குடும்ப வாழ்க்கையானது சுமூகமாகவும் ஆனந்தமாகவும் அமையும். எனினும் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படும் போது ஒரு பெண் வேலைக்கு நிச்சயம் செல்ல வேண்டும். ஆனால் வீட்டுத் தலைவன் உழைப்பது போதுமானதெனில் ஒரு பெண் கணவன் பிள்ளைகளுடன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே எனது கருத்து.

**கிருஷ்ணி, கொழும்பு 13.**

இது நடைமுறையில் சாத்தியமாகும். ஏனெனில் விட்டுக்கொடுத்தல் என்பது அனைத்து பந்தங்களிலும் இருத்தல் அவசியமாகும். முக்கியமாக கணவன் - மனைவி உறவில் அத்தியாவசியமாகும். கணவனிற்கு சில நாட்களில் தான் மிகக் கடுமையான வேலையைச் செய்கிறான். பெண் என்பவள் ஜடமா? அவள் காலை முதல் மாலைவரை வீட்டு வேலைகளை இழுத்துப்போட்டு செய்து கொண்டிருக்கிறாள். கணவன்மார் உணர்ந்து நடக்க வேண்டியது ஒவ்வொரு கணவனின் கடமையாகும். அப்போது தான் இருவருக்கும் சமரசம் பெருகி வாழ்க்கை வசந்தமாக வசப்படும்.

**வி.தனி, இந்து மகளிர் கல்லூரி.**

**க**ணவன் வேலை முடித்தவிட்டு களைத்துப் போய் வருவதால் மனைவிமார் ஆறுதலாக இருக்க வேண்டும். அவருடன் சண்டை பிடித்தால் பிரச்சினைகள் வரும். ஆகவே மனைவி ஆறுதலாக நடந்தால் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பில்லை.

**ஆர். சுமந்தினி**

## பெண்ணியம் கருத்து மேடை - 02.

கடந்த இதழில் கணவன் மனைவி இடையே வேலைச்சமத்துவத்தின் சாத்தியப்பாடு குறித்து பார்த்தோம். அங்கே மனைவி கணவனை கேள்விக்குட்படுத்தும் போது கணவன் கோபமடைகின்றான். இருவரிடையேயும் பிரச்சினை வலுவடைகின்றது.

இங்கு மனைவியின் கேள்விக்குட்படுத்தப்படும் உரிமை மறுக்கப்படுகின்றது. இவ்வாறு மறுக்கப்படுதல் நியாயமானதா? அல்லது கணவனின் நியாயத்தை ஏற்க மறுப்ப தால் தோன்றுவதா?

இது தொடர்பில் உங்கள் சார்வாதங்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.

பயில்நிலம்
59/3 வைத்தியா வீதி
தெஹிவளை

ஓர் மனைவி கணவனானவன் தன் வேலைகளில் பங்குகொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது யதார்த்தமாகும். ஆனால் கணவன் வேலை முடிந்து உடலுள சோர்வுடன் வீடுவந்தவுடனேயே மனைவியிடத்தில் அவ்வாறான எதிர்பார்ப்பு வருமாயின் அது தவறானதாகும். ஆனால் ஓய்வாக இருக்கும் வேளையில் கணவன் மனைவியின் வேலைகளில் பங்குபற்ற வேண்டும்.

**விஜி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தாளர் எம்.கே.முருகானந்தத்துடன் ஓர் நேர்காணல்

**நீங்கள் மருத்துவத் துறையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? இத் துறையில் நீங்கள் பிரகாசிப்பதற்கு உங்களை ஊக்குவித்த சக்திகள் எவை?**

சிறுவயது முதல் மருத்துவத்துறை எனக்கு ஆச்சரியம் ஊட்டுவதாகவும் ஆர்வத்திற்கு உரியதாகவும் இருந்து வந்துள்ளது. மருத்துவத்துறை கிட்டாவிட்டால் பல்கலைக் கழகத்துக்கே செல்வதில்லை என ஒரு கட்டத்தில் தீர்மானித்திருந்தேன். துன்பப்படும் மக்களுக்கு உதவுவதற்கு இது ஒரு சிறந்த வழி என்பதும் முக்கிய காரணம். எனது நெருங்கிய உறவினரான எலும்பு சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் சண்முகலிங்கம் அவர்களுக்கு குடும்பத்திலும் சமூகத்திலும் இருந்த மதிப்பும் மரியாதையும் கூட என்னை அத்துறைக்கு ஈர்த்திருக்கலாம் என இப்பொழுது பின்னோக்கிப் பார்க்கும்போது எண்ணத் தோன்றுகிறது.

மருத்துவத் துறையில் நான் பிரகாசிக்கிறேனா இல்லையா என்பது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் மருத்துவத்துறையில் இருப்பவர்களுக்கு இரண்டு விடயங்கள் முக்கியமாகும். முதலாவது நோயாளிகளை அன்புடனும் ஆதரவுடனும் கடமை உணர்வோடும் அணுக வேண்டும். இது மிக முக்கியமானதாகும். ஏனெனில் நோயாலும் அது பற்றிய பயத்தாலும் கவலையுற்று வருபவர்களுக்கு நம்பிக்கையையும் தெளிவையும் மருத்துவர்கள் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக தினம் தினம் புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளுடன் முன்னேறும் மருத்துவத்துறையில் தாங்கள் பின்தங்கிவிடாது மருத்துவர்கள் தங்கள் அறிவை நாளாந்தம் மெருகேற்றிக் கொள்ள வேண்டும். இவை இரண்டையும் எனது சக்திக்கேற்ற வகையில் கடைப்பிடிக்கிறேன். இதனால் என்னிடம் வரும் நோயாளிகளுக்கு திருப்தி தர முடிகிறது என நம்புகிறேன்.

**முழுநேர வைத்தியராகப் பணிபுரிந்து கொண்டு தங்களால் இலக்கியத் துறையில் எவ்வாறு ஈடுபட முடிகிறது?**

காலை முதல், இரவு எட்டு அல்லது ஒன்பது மணிவரை நோயாளிகளுடன் இருக்க நேர்கிறது. இருந்த போதும் அது சலிக்க வைக்கும் தொழிலாக இன்றும் மாறவில்லை. மருத்துவனாகக் கடமை ஏற்று 30 ஆண்டுகள் ஆகின்ற போதும், ஆரம்ப கட்டத்தில் இருந்தது போன்ற அல்லது அதற்கும் மேலான ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் இன்று வரை தொடர்ந்து என்னால் மருத்துவப் பணி செய்ய முடிகிறது.

அதே நேரம் மருத்துவம் எனது ஒரு கண் எனில் இலக்கியம் எனது மறு கண் எனலாம்.



சிறு வயது முதலே கலையும் இலக்கியமும் எனது இரத்தத்தோடு ஊறியவை. எனக்குப் பேரன் முறையாகிய கற்கண்டுப் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, அவர்களுடன் பல இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். பல தமிழறிஞர்களையும் கலைஞர்களையும் சிறு வயதிலேயே சந்தித்திருக்கிறேன். அதேபோல 'நண்டின் காலை ஒடிக்காதே' போன்ற தித்திக்கும் பாடல்களைப் பாடிய கவிஞரான யாழ்ப்பாணன் என்ற இன்னுமொரு உறவினரது நூல்களையும், நூல் வெளியீட்டு விழாக்களையும் கண்டு மலைத்திருக்கிறேன். இவர்களது நெருங்கிய தொடர்பு இருந்ததால் இலக்கிய நாட்டம் நேர்ந்ததோ தெரியவில்லை. ஹாட்லிக் கல்லூரியில் வித்துவான் வேலோனின் மாணவன். இதனால் முற்போக்கு சிந்தனைகளுடன் பரிச்சியம் ஏற்பட்டது. இவை போன்ற காரணங்களால் பாலர் பாடசாலைக் காலம் முதல் மருத்துவ பீட மாணவனாக இருந்த காலம் வரை மேடைப் பேச்சு, நாடகம், கட்டுரை, கவிதை என பல்வேறு துறைகளிலும் ஈடுபட முடிந்தது.

ஆயினும் நீங்கள் கூறியது போல மருத்துவனாக, அதுவும் குடும்ப வைத்தியத் துறையில் இறங்கிய பிறகு ஓய்வு என்பது என்றும் எட்டாக் கனிதான். ஆயினும் தொடர்ந்து ரசனையுள்ள வாசகனாக இருந்து வர முயற்சிக்கிறேன். தினமும் ஏதாவது வாசிக்க வேண்டும். வாசிக்காமல் இருக்க என்னால் முடியாது. எழுதுவது வாசிப்பது யாவும் பின்இரவுகளில் கண்விழித்தும் அதிகாலையில் எழுந்ததும்தான்.

**உங்களுடைய இலக்கிய முயற்சிகள் பற்றிக் கூற முடியுமா?**

நான் அடிப்படையில் ஒரு தீவிர வாசகனே. எந்தவொரு தீவிர வாசகனும், மனத்தளவில் தீவிர விமர்சகனாக மாற நேரிடுகிறது. விமர்சனமானது வாசித்ததுடன் நின்றுவிடாது தான் வாழும் சமூகத்தையும் உற்று நோக்க வைக்கிறது. அவ்வாறு பார்க்கையில் முரண்களும் விமர்சனங்களும் சிலிர்த்தெழுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை நேரமின்மையால் மனத்துள்ளேயே மரணித்துப் போவது அவலம்தான். ஒரு சிலவே எழுத்தாக ஆவணப்படுகின்றன. சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், அனுபவக் குறிப்புகள் என பலவாறு எழுதியுள்ளேன்.

சிறுகதைத் துறையை எடுத்துக் கொண்டால் நான் மிகக் குறைந்தளவே. குறிப்பாகச் சொன்னால் 5 சிறுகதைகளே எழுதியுள்ளேன். வைத்தியனான எனது அனுபவங்களை சமூகத்தோடு உரைத்துப் பார்த்து சிரித்திரனிலும் மல்லிகையிலும் 'ஒரு டொக்டரின் டயறியிலிருந்து', 'டொக்டரின் கிறுக்கல்கள்' ஆகிய தொடர்களாக எழுதினேன். அவை இப்பொழுது 'ஒரு டொக்டரின் டயறியிலிருந்து'. என்ற நூலாக வெளிவந்துள்ளது.

சிறுகதை நூல்கள், நாவல்கள் போன்ற படைப்பிலக்கியங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரைகள், மதிப்புரைகள், விமர்சனங்கள் மற்றும் சிற்பம், ஓவியம், நாடகம், சினிமா போன்றவை பற்றியும் தொடர்ந்து எழுதி வருகிறேன். இவற்றில் முக்கியமானவை தொகுக்கப்பட்டு 'மறந்து போகாத சில' என்ற நூலாக வெளிவந்துள்ளது.

**இலங்கையின் எழுத்தாளர்கள் பற்றியும் இலங்கையின் படைப்புலகம் பற்றியும் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இலங்கையில் எழுத்தாளர்கள் வெறும் பொழுது போக்கிற்காகவோ, புகழுக்காகவோ, பணத்திற்காகவோ எழுதுவதில்லை. கொள்கை, லட்சியப் பிடிப்பு, சமூக முன்னேற்றம் ஆகிய காரணங்களுக்காகவே எழுதுகிறார்கள். இதனால் இலங்கை எழுத்துக்கள் ஆழ்ந்த சமூக நோக்கு உடையவையாக இருக்கின்றன. அந்தவகையில் பெரும்பாலான படைப்பாளிகளின் படைப்பாக்க முயற்சிகளைப் பார்க்கையில் அவை செழுமையும் புதுமையும், நவீனத்துவமும் வேண்டி நிற்பது புலப்படுகிறது. ஆனால் கவிதை தவிர்ந்த ஏனைய துறைகளில் புதிய தலைமுறையினரின் வரவு குறைவாக உள்ளதும் கவலைக்குரியது.

**விஞ்ஞானம் சார்பான தமிழர்களின் படைப்புகள் எந்த நிலையில் உள்ளன?**

தமிழர்கள் விஞ்ஞானத்துறையில் அதிகமாக நாட்டம் கொண்டு படித்தும், தொழில் பார்த்தும் வந்த போதும் அது சார்ந்த புனைவுகளில் அதிக நாட்டம் கொள்வதாகத் தெரியவில்லை. கோகிலா மகேந்திரனின் 'விஞ்ஞானச் சிறுகதைகள்', செங்கை ஆழியானின் குறுநாவல் போன்ற ஒரு சிலவே அண்மையில் படிக்கக் கிடைத்தன. இந்த துறையில் நூல்கள் குறைவாக வெளியாவது கவலை அளிப்ப தாயுள்ளது. தமிழ் நாட்டில் ஒப்பீட்டு ரீதியில் அதிகம் வெளியாகின்றன. முன்பு சோவியத், மற்றும் சீன நூல்கள் மொழி பெயர்ப்புகளாகக் கிடைத்தன. இப்பொழுது அவையும் கிடைப்பதாயில்லை.

கட்டுரைகளைப் பொறுத்தவரையில் நலவியல் சார்ந்த கட்டுரைகள் ஓரளவு வெளிவருகின்ற போதும் ஏனைய துறைகளில் வருவது குறைவு. நலவியல் துறையில் டொக்டர் கிறீன், பேராசிரியர் சின்னத்தம்பி, டொக்டர் நந்தி முதல் இன்று வரை எழுத்துக்கள் தொடர்கிறன. ஆயினும் அவையும் இன்றைய தேவைகளுக்குப் போதுமானதாயில்லை.

**உங்களிடம் வருகின்ற நோயாளிகளின் மனநிலைகள் எவ்வாறு இருக்கின்றன?**

பல்வேறு விதமான மனநிலைகளுடன் அவர்கள் வருகிறார்கள். ஆயினும் போரினால் விளைந்த மரணங்களும், பொருள் இழப்புகளும், இடப் பெயர்வுகளும், உறவினர்களது பிரிவுகளும் பலரது ஆழ்மனத்தைப் பாதித்துள்ளன. இதனால் மனச்சோர்வு, மனப்பதற்றம், உளநெருக்கீடு போன்ற பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். மாணவர்கள் போட்டிப் பரீட்சைகள் காரணமாக உளநெருக்கீடுகளை எதிர்கொள்கிறார்கள். "தேவையில்லாமல் யோசிக்கிறான்" என உறவினர்களும் சுற்ற இருப்பவர்களும் இத்தகைய நோய்களின் அறிகுறிகளை அசட்டை செய்வது நோய்கள் மோசமாவதற்கு மாத்திரமின்றி தற்கொலைகளுக்கும் கூட இட்டுச் செல்வது பரிதாபத்திற்குரியது.

**இன்றைய இளைய சமுதாயத்திற்கு சமூகம் சார்பான நிலையில் நீங்கள் கூற விரும்புவது என்ன?**

எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என உங்களுக்கென்று சில இலட்சியங்களையும் அது நோக்கிய கனவுகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கற்பனைகளும் இலட்சியங்களும் வெறுமனே சுயநலம் மட்டும் சார்ந்ததாக இல்லாமல் உங்கள் சமூகம், இனம், நாடு எனப் படிப்படியாக விரிந்து முழு மனித குலத்தையும் தழுவியதாக அமைவது முக்கியமாகும். இவற்றிக்கு தேர்ந்தெடுத்த பரந்த வாசிப்பு உதவும்.

## வேறுபாடு

கோயில் விகாரையில்
மசூதியில் தேவாலயத்தில்
எனப் பேதமின்றி
வந்தமர்ந்து செல்லும்
பறவைகள் வேறுபாடின்றி
தம்முள் பேசிக்கொண்டன
வேறுபாடுகளுடன் வந்து
போகும் மனிதர்களைப்
பார்த்து

- அங்கவை -

## இதுவும் இங்கே..


நேற்றைய வானத்தின்
கண் சிமிட்டலால்
பெரிதும்
சிறிதுமாய்
பல காளான்கள் முளைத்தது.
வித்துக்குவைகளின்
பரம்பலின்
வீரியம் புரியவில்லை
முடிவு நாளும்
தெரியவில்லை
ஒதுக்குப்புறமாய்
நிழல் தேடி
பிறந்த ஆவல் குறித்த
விண் அலட்டலும்
பிறக்கவில்லை.
இன்றைய
பொழுதின் முடிவில்
இறாலுடன்
ஜோசப் வீட்டு
சமையல் கட்டிலோ..
மணக்க மணக்க
அம்புஜம் மாமி வீட்டு
அடுப்படியிலோ..
அல்லது
எதுவுமற்றோ
வாழ்வு முடியலாம்.
திடமற்ற
உடல் தண்டும்
தலைநிமிரா கொள்கையும்
வாழ்ந்தென்ன?
விழ்ந்தென்ன?
நேற்றைய மழையில்
இன்றுதித்து
நாளை மரணித்து
வாழ்வின் அடையாளங்கள்
எதுவுமற்று..
இதுவும் இங்கே நடக்கிறது -
அரிதாக!

- இ. சுபாரா
(தமிழ் நாடு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டைப்பட
சிறுகதை / கவிதை

இந்த அட்டைப்படம் தொடர்பில் உங்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை கவிதையாகவோ சிறுகதை யாகவோ வடிவம் கொடுத்து அனுப்பி வைத்தவர்களின் ஆக்கங்கள் சில தெரிவின் பின் இங்கே.

## சிறுகதை

### உங்கள் விருப்பம்.

அலுவலக அவசரம் யாரைத் தான் விட்டு வைத்தது. அனுஷா காலையில் எழுந்து காலை கடன் களை முடித்து, சமைத்து, வீட்டினை ஒதுங்கவைத்து, அலுவலக ஆடைகளை தயார்செய்து.............. இப்படி இவள் பட்டியல் நீண்டு சென்றது. இவளது மகள் சுமதி, இம்முறை சாதாரண தர பரீட்சை எழுத இருப்பவள். இப்போது பாடசாலை விடுமுறை தாயின் இயந்திர நடத்தையை பொருட்படுத்தாதவ ளாய் வானொலி கேட்டுக்கொண் டிருந்தாள். அனுஷா, கணவனுட னான விவாகரத்தின் பின்னரும் எந்தக்குறையும் தெரியாதவளாய் மகளை வளர்த்து வருகிறாள். சுமதியின் அலட்சியப்போக்கு அனு ஷாவிற்கு ஆத்திரத்தை ஊட்டியது. "சுமதி உனக்கு அப்பன் புத்திதான். மத்தவங்க படுகிறபாட்டை புரிஞ்சிக் காத தன்மை, கூட மாட ஒத்தாச புரி வோம் என்ட எண்ணம் துளியும் இல்ல. அப்பனுக்கு தப்பாம பிறந் திருக்கிறா...." வார்த்தைகள் இடை விடாது வந்துவிழுந்தன. "அம்மா, சும் மா கத்தாதீங்க, உதவி வேணு மென்றால் வாயத்திறந்து கேளுங்க, சும்மா அப்பாவ இழுக்காதீங்க", "ஏனடி, உங்கப்பன் ரொம்ப திறம் தானே. பெண்டாட்டியோட ஒழுங்கா வாழத் தெரியாதவன்". "விவாகரத்தில் உங்களுக்கும் பங்கிருக்கு மறந்தி டாதீங்க" வாக்குவாதம் அதிகரிக்க அனுஷாவின் கைகள் சுமதியின் கன் னங்களை பதம் பார்த்தன. சுமதி கண்ணீரால் கதைபேச உதடுகளை மௌனித்தாள். அனுஷா அலுவலகம் சென்று விட்டாள். அவளிற்கு இன்று மனம் எதிலும் ஈடுபடவில்லை. தொலை பேசியை சுழற்றுகிறாள்.

**இனி எதை வேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளுங்கள்.**

**முடிவு 01**

நீண்டநேரம் தொலைபேசி சிணுங் கியும் பதில்வரவில்லை. அவளது கோபம் அதிகரித்து. அரைநாளுடன் வீட்டிற்கு வருகிறாள். நீண்டநாழிகை காத்திருந்தும் கதவுகள் திறபடவில் லை. பக்கத்துவீட்டில் மகள் கொடுத்தி ருந்த திறப்பை வாங்கி , திறந்து கொண்டு உள்ளே சென்றவளை ஒரு கடிதம் வரவேற்றது. "அம்மா, மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா உங்களிற்கு நல்ல கணவனாக இல்லாமல் இருந் திருக்கலாம், ஆனால் எனக்கு நல்ல தந்தை, ஊருக்குள் நல்ல மனிதர் அவரை குறை கூற உங்களிற்கு எந்த உரிமையும் இல்லை, நீங்கள் உரிமைகளுக்கு விவாகரத்து கொடுத்த பின்னர். நான் அப்பா வீட்டிற்குச் செல்லுகிறேன். அப்பாவை குறை கூறியதற்காய் மன்னிப்பு கேளுங்கள் வருவதைப் பற்றி யோசிக்கலாம்". அனுஷாவின் ஆத்திரம் அதிகரித்தது. "அப்பனுக் காக என்ன தூங்கி எறிந்திட்டாள். பெட்ட கழுதை இவ இல்லாட்டி என்னால் வாழ முடியாதா? நான் இறங்கிச் செல்ல மாட்டேன். தனியாக என்னால் வாழ முடியும்".

**முடிவு 02**

தொலைபேசியை சுமதி தூக்குகிறாள். "நான் அம்மா பேசுகிறேன்" எதிர் முனையில் விசும்பல் மட்டுமே கேட்டது. "சுமதி" மீண்டும் விசும்பல் எதையோ இழந்தவள்போல அனுஷா அரைநாளுடன் வீடு வருகிறாள். கதவுகளை திறக்க, வீங்கிப்போன முகத்துடன் சுமதி, அனுஷா துடித் துப்போனாள். "அம்மா", "சுமதி" இருவரும் கண்கலங்க கட்டியணைத் துக் கொண்டார்கள். "மன்னிச் சிடுங்க அம்மா" "நீ தான் மன்னிக் கனும் உன் அப்பாவப் பத்தி நான் தப்பாக பேசி இருக்கக் கூடாது. அது மட்டுமில்லாம மிருகத்தனமா உன்ன அடிச்சிட்டன்". அழுதுவிட்டாள் அனுஷா. சுமதி தாயின் கண்களை துடைத்து "நீங்க என்ன செய்தாலும் எனக்கு வேணும் அம்மா, நமக்கு நடுவ யாரும் வரக்கூடாது". மீண்டும் இருவரும் தழுவ விழிகளில் அருவி கள் இம்முறை ஆனந்தக் கண்ணீர்.

- மகேந்திரானந்தி

---

## கவிதை

### முகங்கள்?

பல முகம் கொள்பவர்களே
உங்களிடம் ஒரு வேண்டுகோள்
என் முகம் சலனமற்ற வெற்றுமுகம்
ஒருவரிற்காய் சிரித்த முகம்
மற்றொருவருக்காய் அழும் முகம்
யார் யாருக்காகவோ பல முகமூடிகள்
அணிய மறுக்கிறது என் உள்ளம்
என்னை நானாக இருக்க விடுங்கள்

**க. கார்த்திகா**

அட்டைப்பட
சிறுகதை /
கவிதை




இந்த அட்டைப்படம் தொடர்பில் உங்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்களை கவிதையாகவோ சிறுகதை யாகவோ வடிவம் கொடுத்து அனுப்பி வைக்கவும். உங்கள் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் அடங்கியவையாக எதிர்பார்க்கப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓ மனிதர்களே
யாரிவர்கள்?
மெய் முகம் காட்ட மறுத்து
பொய் முகம் காட்டும்
வேடதாரிகளா?...

சமுதாய அழுத்தமெனும்
சாக்கடையுள் ஊறி
தம் அழகுரு அழித்த
யதார்த்த வாதிகளா?
இல்லை,
ஆதிக்கப் பேய்களால்
அடக்கப்பட்டு
முகத்தைக்கூட
கோணலாக்கிய சுதந்திர
மனிதர்களா?

அரசின் கைகளில்
பேச்சிழந்து, மூச்சிழந்து,
வதனமதி ஒளியிழந்து,
தலையாட்டி
பொம்மலாட்டப்
பொம்மைகளாய்
வாழும் ம(ா)க்களா?
இல்லை,

நாகரிக உலகில்
பணத்திற்காய்
சிரித்தும், அழுதும்
அன்பை விலைபேசும்
சுயநல வாதிகளா?...

பிறர்துன்பம் பார்க்கப்
பொறாது
முகமூடிகளால் முகம்
மறைத்து தமது துன்பம்
துடைக்க மாட்டும்
விழித்தெழும்
அற்பமானிடக்களா?
இல்லை,

முகம் தொலைத்த மனிதத்தை
கடவுள் தன் கைகளால்
மானுட முகங்களில்
தேடிப்பார்க்கின்றாரா?
இல்லை, எனின்,
நிம்மதி தேடியலைந்து
தம் உண்மை முகத்தின்
முகவரி தேடிப்புறப்பட்ட
மொட்டைக் கடிதங்களா
இந்த முகங்கள்?....

- கு.பாரதி -



## வாசகர் மேடை

பேனாவின் கூர்முனையால் ஒரு புதிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவோம் வாரீர். எழுத்தாளன் என்பவன் ஒரு நாட்டின் முதுகெலும்பு. வாள்முனையைவிட பேனா முனை கூரியது. 6.9.2004 திங்கட்கிழமை ஐ தொலைக்காட்சி அலைவரிசையில் பயில்நிலம் சஞ்சிகை பற்றியும் அதன் பணிகள் பற்றியும் அறிந்து கொண்டேன். எங்களைப் போன்ற இலைமறையாக இருக்கும் எழுத்தாளர்களுக்கு உங்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டி காத்திருக்கிறேன். வாழ்க உங்கள் முயற்சி. பயில்நிலம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர என் நல்லாசிகள் .

**யாழூர் ராஸிக். பாணந்துறை**

2003 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சை எழுதிவிட்டு இருக்கும் நான் பாடசாலை, மாவட்ட, மாகாண ரீதியாகவும் பல அமைப்புக்கள் ஊடாகவும் கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல போட்டிகளில் கலந்து 1ம், 2ம் இடங்களைப் பெற்றிருக்கிறேன். பத்திரிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. உங்கள் பயில் நிலம் ஊடாக எனது ஆக்கங்கள் வெளிவர விரும்புகிறேன். உங்கள் அமைப்பு பற்றிய மேலதிக விபரங்கள், உங்கள் வெளியீடுகளைப் பெறும் வழிமுறைகள், எவ்வாறு எங்கள் ஆக்கங்களை அனுப்ப முடியும். எப்படிப் பட்ட ஆக்கங்களை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? ஒவ்வொரு முறையும் தலைப்புக்களை நாம் எவ்வாறு அறிய முடியும் போன்ற சகல விபரங்களையும் அறியத்தருமாறு மிகப் பணிவுடன் கேட்கிறேன்.

**பெனாசிர். நீர்கொழும்பு**

சஞ்சிகையின் அட்டைப்படத்திற்கான அறிமுகம் மிகவும் யதார்த்தமாக சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்தது. இவ்வாறான சிந்தனை எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்யும் என்பது திண்ணம். உங்கள் முயற்சி என்றும் தொடர என் நல்வாழ்த்துக்கள்.

**சுஹைல் அஹ்மத், அக்கரைப்பற்று**

நீங்கள் இம்மாதம் அறுவடை செய்த இதழில் ஒன்று எனக்கும் கிடைத்தது. உங்கள் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். உங்கள் இதழில் வெளிவந்த ஆக்கங்கள் அனைத்தும் நன்றாக இருந்தது. நீங்கள் வாசகர்களிடம் இருந்து எதிர் பார்க்கும் விடயங்களை இன்னும் தெளிவாக அறியத்தர வேண்டும் என கேட்டுக்கொள்ளுகின்றேன். உங்கள் பயில் நிலத்தில் எனது சிந்தனைகளையும் விதைத்து அறுவடைக்காக காத்திருக்கிறேன்.

**மு. கிருஸ்ணவேணி, கொழும்பு 14**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் ஒரு நகல் வெளியிடுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதோடு இந்நகலானது தனித்த கவிதை, கட்டுரை, தமிழ் இலக்கண இலக்கியம் என்பவற்றிற்கு அப்பால் இன்றைய மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பயனுள்ள விடயங்கள் அமைவதும், கல்வி சார்ந்த, அரசியல் சார்ந்த விடயங்கள் அமைவதும் தொடர்ந்த பயில் நகல் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**ம. ஜெயதேவா, கொழும்பு - 06**

இச்சஞ்சிகையை தனிநபர்களாக செயற்படாமல் மத வேறுபாடின்றி குழுவாக இணைந்து மக்களின் மனதில் இருக்கும் மூட நம்பிக்கைகளை அகற்ற பயனுள்ள வகையில் பயல்நிலம் என்ற பெயரில் வந்த சஞ்சிகையை தயாரித்த அனைவருக்கும் என் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். பயில்நிலம் இடைவிடாமல் தொடர்ந்து வெளிவர எனது நல்ஆசிகள். என்னால் முடிந்தளவு என்னைப் போன்ற யுவதிகளுக்கும் சஞ்சிகையை அறிமுகப்படுத்துகின்றேன்.

**றிகானா, ஏறாவூர்**

உங்களின் சஞ்சிகை தொடர்பான விடயங்களை மனையாள் மண்டப நிகழ்ச்சி ஊடாக அறிந்து கொண்டேன். உங்கள் சஞ்சிகையின் பெயரும் அட்டைப்படமும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. உங்கள் சஞ்சிகையின் வாசகி ஆக வேண்டும் என்ற ஆர்வமும் உள்ளது. என்னுடைய ஆவலையும் ஆர்வத்தையும் பூர்த்தி செய்வீர்கள் என நம்புகிறேன். உங்களுடைய சஞ்சிகையை எமது பிரதேசத்தில் எவ்வாறு பெற்றுக்கொள்வது போன்ற தகவல்களை அறியத்தருமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

**எம் ஜே ரிஸ்மி, அட்டாளைச்சேனை**

*எமது பயில்நிலம் இதழுக்கு வாசகர்களாகிய உங்களது பங்களிப்பு எமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருகிறது. தொலைபேசி ஊடாகவும், நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் எம்முடன் தொடர்பு கொண்டு கருத்துக்களை பரிமாறிய அனைத்து வாசகர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். தொடர்ந்தும் உங்களது ஆக்கங்களையும் விமர்சனங்களையும் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம்.*

*ஆசிரியர் குழு*

# உங்களோடு சில நிமிடங்கள்

பயில்நிலம் அனைத்துத் பிரதிகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியோடு உங்களைச் சந்திக்கின்றோம். பயில்நிலம் முதலாவது இதழுக்கு நீங்கள் வழங்கியிருக்கும் ஆதரவு எம்மை மலைக்க வைக்கிறது. நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் வாயிலாகவும் தங்கள் அன்பையும் ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

பயில்நிலத்தின் முதலாவது வெளியீட்டு நிகழ்வு 04.09.2004 இல் கொழும்பு தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மூத்தோர் பார்வையினை தமிழாசான் முரளி அவர்களும், ஊடகவியலாளர் பார்வையினை ஏ.ஆர். வாமலோசனும் நிகழ்த்தினர். அத்தோடு இவ்வைபவத்தில் பயில்நிலம் குழுவினரின் **இல்லாத ஒன்றைப் பற்றி** என்ற கவியரங்கம் கவிஞர் மாவை வரோதயன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து புத்தகப் பண்பாட்டு புரவலர்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற்று எம்மைக் கௌரவித்தார்கள்.

பயில்நிலம் நூல் அறிமுகம் **வெக்டோன்** சர்வதேச தொலைக்காட்சியிலும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் **செனல் ஐ** தொலைக்காட்சியிலும் இடம்பெற்றது. எமது விநியோகக் குழுவினர் கொழும்பில் உள்ள பல பாடசாலைகளுக்கு நேரில் சென்று நூல்களை விநியோகித்தார்கள். இதற்கு அப் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் வழங்கிய ஆதரவு எமக்கு உச்சாகம் ஊட்டியுள்ளது.


இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக இலங்கையின் மூத்த **கவிஞர் இ. முருகையன்** அவர்கள் பயில்நிலத்தை வாழ்த்திப் பா எழுதி எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். அவருக்கு எமது நன்றிகள்.

பயில்நிலத்தை கொழும்பு என்ற வட்டத்தினுள் இருந்து அகில இலங்கைக்கும் பரவ விடுவது எங்களது அவா. இதன் முன்னோட்டமாக தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு பிரதேசங்களில் எங்களுடைய வெளியீட்டு நிகழ்வுகளைநடாத்த உத்தேசித்துள்ளோம். இதற்கு உதவக்கூடிய அமைப்புக்களின் மேலான தொடர்புகளை வரவேற்கின்றோம். மேலும் பயில்நிலத்தை தங்கள் பிரதேசங்களில் விநியோகிக்க விரும்புகிறவர்களும், விளம்பர அனுசரணை வழங்க விரும்புபவர்களும் எங்களுடன் தொடர்புகொள்ளலாம். தொடரும் அறுவடைகள் உங்கள் உணர்வு விளைச்சல்களுடன் வர காத்திருக்கின்றன. மீண்டும் அடுத்த அறுவடையில் சந்திப்போம்.

**பயில்நிலம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடுநிலைமை நாடகம்

நடுவு நிலைமை வகிப்பது
இன்றைய நிலையில்
நடைமுறையில்லாததாகிவிட்டது
ஏனெனில்
நிறுக்க முன்பே
கோணலாயிருக்கும்
தராசுகளால்
நடுநிலைமையாய்
நிறுக்க முடியாது
ஆனால்
பல சமயங்களில்
நிறுப்பதற்கு முன்பே
கோணல் என்பது
நிறுத்து முடிந்த பிறகே
தெரியவருகிறது.



- கவின்கோ -

இம் மாத இதழ் 59/3, வைத்தியா வீதி, தெஹிவளை. பயில்நிலம் குழுவினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org